புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • செப்டம்பர் 14, 2023 • புரட்சி 23 • முழக்கம் 35 • விலை ரூ.3.00

## ‘சனாதன வாழ்வியல்’ எது என்று பதில் சொல்!
# சனாதன முகமூடிக்குள் பார்ப்பனியம்

சனாதனம் என்ற முகமூடியில் பார்ப்பனியம் இப்போது பதுங்கி நிற்கிறது. சனாதனம் என்பது ஒரு வாழ்க்கை முறை, அது வர்ணாசிரமம் அல்ல என்று வாதிடுகிறார்கள். சனாதனவாதிகளுக்கு சில கேள்விகள்.

1. வர்ணாசிரமம் வேறு; சனாதனம் வேறு என்று கூறும் நீங்கள், வர்ணாசிரமத்தை எதிர்க்கிறோம் என்று கூறத் தயாரா?

2. சனாதனம் ஒரு வாழ்க்கை முறை என்று கூறுகிறார்கள், அந்த வாழ்க்கை முறை என்ன? அதன் பண்புகள் என்ன என்பதை விளக்குவார்களா?

3. வருணாசிரமம் அல்லாத சனாதன வாழ்க்கை முறை எப்போது எந்த காலத்தில் இங்கே நிலவியவது?

4. பால்ய விவாகம், சதி எனும் உடன்கட்டை ஏற்றும் கொடுமை தீண்டாமை, பிராமணன் வணக்கத்தக்கவன், சூத்திரன் பிராமணர்களின் வைப்பாட்டி மகன், கணவனை இழந்த பெண்களுக்கு மொட்டை அடித்து காவி வெள்ளை ஆடை அணிவித்து சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைத்தல், 10 வயது பிராமண சிறுவன் 70 வயது சூத்திர முதியவரை வாடா போடா என்று அழைத்து இழிவுபடுத்துதல், இப்படிப்பட்ட வாழ்க்கை முறையை சனாதன தர்ம வாழ்க்கை முறை என்கிறீர்களா அல்லது மறுக்கிறீர்களா?

5. சனாதன தர்மம் என்பது வர்ணாசிரம தர்மம் தான் என்றும், தீண்டாமை ஷேமகரமானது என்றும் இறந்து போன காஞ்சி சீனியர் சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரஸ்வதி கூறியதை ஏற்கிறீர்களா? மறுக்கிறீர்களா?

6. அவரே வர்ணாசிரம கடமைகளை 'பிராமணர்கள்' கண்டிப்பாக பின்பற்ற ஒரு அமைப்பை உருவாக்கி அதற்கு சனாதன சபை என்று பெயர் சூட்டியதற்கு என்ன பதிலை கூறப் போகிறீர்கள்?

7. 'பிராமணர்கள் கடல் தாண்டக் கூடாது' என்ற கட்டுப்பாட்டை உடைத்து வெளிநாடுகளில் உயர்ந்த பதவிகளிலும், நீதிபதிகளாகவும் ஐடி நிறுவனங்களிலும் பணியாற்றுவது சனாதன தர்ம மீறலா? வர்ணாசிரமம் மீறலா? இதை சுட்டிக்காட்டிய உதயநிதி ஸ்டாலின் தலைக்கு விலை வைக்கும் நீங்கள் இந்த பிராமணர்களின் தலைக்கு என்ன விலை வைக்கப் போகிறீர்கள்?

8. இந்து மகாசபை தலைவர்களில் ஒருவரான பண்டித மதன் மோகன் மாளவியா என்ற 'பிராமணன்' லண்டன் வட்ட மேசை மாநாட்டுக்கு கடல் தாண்டி சென்றார். அதற்கு பரிகாரமாக ஒரு கூஜாவில் கங்கை நீரையும், காசியிலிருந்து மண்ணையும் எடுத்துக்கொண்டு லண்டனில் கடல் தாண்டிய பாவச் செயலுக்காக பூஜைகளை செய்தார். சனாதனம் நிரந்தரமானது என்றால் பரிகாரம் செய்து பாவத்தை போக்கிவிடலாமா? இது சனாதான வாழ்க்கை முறையா? வர்ணாசிரம வாழ்க்கை முறையா?

9. நீங்கள் பேசும் சனாதனம் தீண்டாமையை ஆதரிக்கிறதா? எதிர்க்கிறதா? சனாதன வாழ்க்கை முறையில் தீண்டாமை இல்லை என்று நிரூபிக்க உங்களிடம் ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா?

10. தீண்டப்படாதார் கோயில் நுழைவு சட்டம் வந்த போது அதை எதிர்த்து லண்டன் பிரிவி கவுன்சில் வரை சென்று வழக்காடி தனக்கு சாதகமான தீர்ப்பைப் பெற்றது சனாதன சங்கம். இதுதான் சனாதன வாழ்க்கை முறையா?

11. 1941 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் தேதி இந்து மகாசபை தலைவர் சாவர்க்கரை சனாதன தர்ம அமைப்பைச் சார்ந்தவர்கள் சந்தித்தார்கள், அப்போது தீண்டப்படாதார் கோயில் நுழைவு உரிமைக்கு சட்டம் கொண்டு வந்தால் அதை இந்து மகாசபை எதிர்க்கும் என்று கூறிய சாவர்க்கர், மற்றொரு முக்கிய கருத்தையும் கூறினார். இந்து சமூகம் முழுமைக்கும் சனாதான தர்மம் பொருந்தும் என்று இப்போது பாஜக கூறுவதைப் போல் அவர் ஏற்கவில்லை சனாதன தர்மம் என்பது ஒட்டுமொத்த இந்து சமூகத்திற்கும் பொதுவானது அல்ல என்று கூறினார். (ஆதாரம் ; சாவர்க்கர் உரைத் தொகுப்பான Whirlwind Proganda )


12. கோயில் நுழைவுக்கான உரிமைச் சட்டம் வந்தபோது காந்தி அதை ஆதரித்தார். இதை எதிர்த்து இந்து மகாசபை தலைவர் பார்ப்பனர் மதன் மோகன் மாளவியா 1933 ஜனவரி 23 காசியில் பார்ப்பனர்களைத் திரட்டி போராட்டம் நடத்தினார். போராட்டம் நடத்திய அந்த அமைப்புக்கு அவர் சூட்டிய பெயர் சனாதன மகா சபா. இதுதான் சனாதன வாழ்க்கை முறையா?

13. 1933 ஜனவரி 8ஆம் தேதி மாளவியா காந்திக்கு எழுதிய கடிதத்தில் சில நிபந்தனைகள் சூழ்நிலைகள் காரணமாக தீண்டப்படாதவர்கள் இருக்கின்றன. அவர்களின் பிறப்பு, செய்யும் தொழில் அடிப்படையில் தான் தீண்டாமை நிர்ணயிக்கப்படுகிறது என்று பச்சையாக ஆதரித்து கடிதம் எழுதினார். இது சனாதன வாழ்க்கை முறையா? வர்ணாசிரம வாழ்க்கை முறையா? இரண்டும் வெவ்வேறு என்று வாதிடுகிறவர்கள் இந்த தீண்டாமையை எதிர்த்ததாக வரலாறு உண்டா?

14. 1947 செப்டம்பர் 10ஆம் தேதி பம்பாய் மாகாண சட்ட சபையில் தீண்டப்படாதார் கோயில் நுழைவு சட்டம் வந்தபோது சட்டத்தை எதிர்த்து அன்றைய பம்பாய் மாகாண முதல்வர் பி.ஜி.கெர் என்பவரிடம் மனு கொடுக்க சென்றது ஒரு அமைப்பு, அந்த அமைப்பின் பெயர் 'சனாதன இந்து' இதை சட்டமன்றத்தில் முதல்வரே அறிவித்து அந்த கோரிக்கையை ஏற்க முடியாது என்று கூறினார். இதுதான் சனாதன வாழ்க்கை முறையா?

தொடரும்

# பாரத தேசத்துக்கு சரித்திர ஆதாரம் உண்டா?



*இந்தியாவை ‘பாரத தேசம்’ என்றும் இந்திய அரசியலை இராம ராஜ்ஜியம் என்றும் காங்கிரஸ்காரர்கள் (ஆரிய-பார்ப்பனர்) சொல்லும் காரணம் என்ன? இவற்றிலிருக்கும் உண்மை என்ன? என்பவை சிந்திக்கப்படத்தக்கவையாகும். நிலப்பரப்புக்கு எடுத்துக் காட்டும் ஆதாரமும் காட்ட வேண்டுமானால், பூகோளத்திலிருந்து கையாளப்பட வேண்டும். அதுபோலவே, பண்டைய அரசியலுக்கு எடுத்துக்காட்டும் ஆதாரமும் காட்டப்பட வேண்டுமானால், சரித்திரத்தில் இருந்து கையாளப்பட வேண்டும்.*

*பெரியார், விடுதலை - 12.6.1933*

*உண்மையாக இந்த நாட்டை ஆண்ட அரசர்கள், உண்மை சரித்திரப்படி எத்தனையோ பேர்கள் இருக்கும் போது - ஆளாததும் அறிவுக்கும், உண்மைக்கும், உரிமைக்கும் மாறுபாடானதுமான ஒரு பெயரை மக்கள் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமானால் அது எப்படி நியாயமாகும் என்று கேட்கிறோம். அதிலும் இந்தப் பெயர்களை, போலித் தன்மைகளை வைத்துக் கொண்ட அதன் மூலம் உண்மையான, சரித்திர ஆதாரமான பெயரைக் கொண்டு ஒரு நாட்டை அதாவது திராவிட நாட்டை திராவிட நாடு என்றழைத்து, அது உரிமைபெற வேண்டுமென்று முயற்சிப்பவர்கள் கூட்டத்தில் புகுந்து கொண்டு, அக்கூட்டத்தில் குழப்பம், காலித்தனம் விளைவிக்க, ‘பாரத நாட்டுக்கு ஜே’ பாரத மாதாவுக்கு ஜே! என்று கூப்பாடு போடுவது எந்த விதத்தில் யோக்கியமும், மானமும், உண்மையுமான காரியமாகும் என்று கேட்கிறோம்*

*பெரியார், விடுதலை 12.06.1946*

## தலையங்கம்

# அமைச்சர் உதயநிதியின் உறுதியை பாராட்டுகிறோம்

தமிழக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆட்சியே போனாலும், சனாதன எதிர்ப்பை கைவிட மாட்டோம், திராவிட இயக்கம் தோன்றியதே சனாதன எதிர்ப்புக்காகத்தான் என்று உறுதியுடன் அறிவித்து விட்டார். இந்த கொள்கை உறுதியை நாம் பாராட்டி வரவேற்கிறோம். தேர்தல் வாக்கு வங்கி அரசியல் என்று வந்துவிட்டால், பல நேரங்களில் கொள்கைகளை பின்வாங்கச் செய்துவிடும். இதுதான் பொதுவான தமிழகத்தின் அரசியல், ஆனால் உதயநிதி என்ற இளைஞர் அதில் மாறுபட்டு தனது கொள்கை அடையாளத்தைப் பற்றி நிற்பது அரசியலில் ஓர் அதிசயம் என்றே கூறுவோம்.

பத்திரிக்கையாளர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கும் பண்பும், பாங்கும் கூட மிகவும் மாறுபட்டதாகவே இருக்கிறது. போகிறப் போக்கில் ஊதித்தள்ளிவிடுகிறார்.

இந்தியாவுக்கு பாரத் என்று பெயர் சூட்டிய மோடியின் முயற்சி குறித்த கேள்விக்கு ‘9 ஆண்டுகளில் இந்தியாவை மாற்றிக் காட்டுவேன் என்றார் மோடி, இதோ மாற்றிவிட்டார்’ என்று பதிலளிக்கிறார். தனது தலைக்கு 5 கோடி விலை நிர்ணியிக்கும் துறவி முற்றும் துறந்த சாமியாரா? அல்லது போலிச் சாமியாரா? சாமியாருக்கு இவ்வளவு கோடி பணம் எப்படி வந்தது என்று திருப்பிக் கேட்டார்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் நடத்திய சனாதன ஒழிப்பு மாநாட்டில் பேசிய உதயநிதியை மட்டும் குறிவைத்து சங்கிகள் அரசியல் காரணங்களுக்காக சனாதன ஒழிப்பு என்று அவர் பேசியதை, இந்துக்களை படுகொலை செய்யச் சொன்னதாக திரித்துப் பேசுகிறார்கள். நாட்டின் பிரதமரே அமைச்சரவையைக் கூட்டி சனாதனத்தை எதிர்ப்போரை அமைச்சர்கள் மக்களிடம் அம்பலப்படுத்த வேண்டும் என்று மிகவும் தரம்தாழ்ந்து பேசியுள்ளார். அதன் விளைவாக ஒன்றிய ஜல்சக்தி துறை அமைச்சர் கஜேந்திரசிங் செகாவத் என்பவர் சனாதனத்தை எதிர்ப்பவர்கள் நாக்கை வெட்ட வேண்டும், கண்களை பிடுங்க வேண்டும் என்று ‘மனுசாஸ்திர வழியில்’ பேசியிருக்கிறார்.

சனாதன வாழ்க்கை முறை என்பது பட்டாக்கத்திகளுடன் திரியும் வன்முறை வாழ்க்கை முறை தான் என்று அமைச்சர் இந்த பேச்சு மூலம் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கோயிலுக்குள் தீண்டப்படாத சமூகத்தைச் சார்ந்த நந்தனை சிவபெருமான் உள்ளே அழைக்காமல் நந்தியை விலகச் சொல்லி தரிசனம் செய்தது தான் சனாதனப் பெருமை என்று தீண்டாமைப் பெருமை பேசுகிறார். சதி என்பது பெண்கள் கற்பை காப்பாற்றிக் கொள்ள பிரிட்டிஷ் படை வந்த போது உருவானது என்றும், அதற்கும் சனாதன தர்மத்திற்கும் தொடர்பில்லை என்றும் அண்ணாமலை கூறுகிறார். சதியை ஒழித்துக்கட்ட சட்டம் கொண்டுவந்ததே பிரிட்டிஷ் ஆட்சி தான். 1828ல் வில்லியம் பெண்டிங் சதியை ஒழித்து ஆணை பிறப்பித்தார். அப்போது சதி எனும் இந்து சனாதன பண்பாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி தலையிடக்கூடாது என்று வழக்கு போட்டு லண்டன் பிரிவி கவுன்சில் வரை கொண்டு சென்றதே ரதா கந்தா தேவ் என்ற பார்ப்பனர் தான். ராஜாராம் மோகன் ராய் பிரிவி கவுன்சிலில் எதிர் மனு போட்டு வழக்காடினார் என்பது வரலாறு.

உதயநிதி ஸ்டாலின் உரை இத்தகைய ’வெட்டுக்குத்து’ அமைச்சர்களையும், வரலாறு தெரியாத அண்ணாமலைகளையும், கீழ்த்தர அரசியல் நடத்தும் மோடிகளையும் மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்தி இருக்கிறது. அதற்காகவே உதயநிதியை பாராட்ட வேண்டும்.

இத்தகைய கொள்கை உறுதி கொண்ட துடிப்பும், செயலாற்றலுமிக்க தலைமை திமுகவுக்கு கிடைத்திருப்பது திராவிடத்தின் வெற்றியையும் சனாதனத்தின் வீழ்ச்சியையும் விரைவுபடுத்தி இருக்கிறது என்பதாகவே நாம் கருதுகிறோம். உதயநிதியின் இலட்சியப் பயணம் தொடரட்டும், கோடானு கோடி இளைஞர்கள் அதில் இணைந்து நிற்க தயாராக இருக்கிறார்கள்.

# கொலைகார சாமியாரை கைது செய்யக் கோரி கழகம் புகார் மனு

**சென்னை** : “டெங்கு, மலேரியா, காலரா போன்று சனாதனமும் ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று” என்று பேசிய மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலையை கொண்டு வருபவர்களுக்கு ரூ.10 கோடி நிர்ணயித்த அயோத்தி சாமியார் பரம்ஹன்ஸ ஆச்சாரியாவை கைது செய்து சிறையில் அடைக்க கோரி கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி தலைமையில் இராயப்பேட்டை காவல் ஆய்வாளரிடம் புகார் அளிக்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, சனாதன சக்திகளின் கனவு தமிழ்நாட்டில் ஒருபோதும் பலிக்காது, சனாதனத்திற்கு எதிரான கருத்தில் உறுதியாக நிற்கும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு திராவிடர் விடுதலைக் கழகம் துணை நிற்கும் என்று கூறினார்.

**கோவை** : கோவை மாநகரக் கழக சார்பில் காட்டூர் காவல் ஆய்வாளரிடம் புகார் அளிக்கப்பட்டது.

**திண்டுக்கல்** : திண்டுக்கல் மாவட்ட கழக அமைப்பாளர் மருதமூர்த்தி தலைமையில் திண்டுக்கல் மாவட்டத் துணைக் கண்காணிப்பாளரிடம் புகார் அளிக்கப்பட்டது.

**திருப்பூர்** : 06.09.2023 அன்று கழகப் பொருளாளர் துரைசாமி, கழக முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், மாவட்டத் தலைவர் முகில் இராசு, தோழமை அமைப்புத் தோழர்கள் ஆகியோர் மாநகரக் காவல் துறையினர் இடத்தில் புகார் மனு அளிக்கப்பட்டது.

**சேலம்** : தாரமங்கலம் ஒன்றியக் கழகம் சார்பில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைக்கு 10 கோடி என கொலை மிரட்டல் விடுத்த உத்திரபிரதேச சாமியார் பரம்ஹன்ஸ ஆச்சார்யாவை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் 09.09.2023 சனிக்கிழமை அன்று காலை 11 மணியளவில் தாரமங்கலம் அண்ணா சிலை அருகில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கே.ஆர்.தோப்பூர். அஜித்குமார் தலைமை வகித்தார்.

சேலம் கிழக்கு மாவட்ட தலைவர் க.சக்திவேல், சேலம் மேற்கு மாவட்ட தலைவர் கு.சூரியகுமார், நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் பொ. கிருஷ்ணன், சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி தலைவர் சி. தங்கதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். கே.ஆர்.தோப்பூர் கண்ணன் தொடக்கவுரையாற்றினர்.

தலைமைக்குழு உறுப்பினர் அ.சக்திவேல், தலைமைக்குழு உறுப் பினர் காவை ஈசுவரன், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராசு, சேலம் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, சேலம் மாவட்ட அமைப்பாளர் பாலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்காடு தேவா, விசிக கொளத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சேட்டு குமார், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சேலம் மாவட்ட துணை தலைவர் சந்தோஷ்குமார், ஆத்தூர் மகேந்திரன், இளம்பிள்ளை கோ.திவ்யா உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில் நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் கிருஷ்ணன் அவர்களுக்கு பரம்ஹன்ஸ ஆச்சார்யா வேட மணிந்து கைவிலங்கு போட்டு செருப்பு மாலை அணிவிக்கபட்டு, தோழர்கள் சாமியார் பாரம்ஹன்ஸ ஆச்சார்யா வின் படத்தை கிழித்தும், தீயிட்டு கொளுத்தியும் எதிர்ப்பை பதிவு செய்தனர். நிறைவாக குடந்தை பாலன் நன்றி கூறினார்.

# பகுத்தறிவு நடிகர் மாரிமுத்து உடலுக்கு தோழர்கள் இறுதி மரியாதை



திரைப்பட நடிகரும் பகுத்தறிவாளருமான தோழர் மாரிமுத்து அவர்கள் சென்னையில் 08.09.2023 அன்று காலை 10 மணியளவில் முடிவெய்தினார். தேனி மாவட்டத்தில் ஒரு குக்கிராமத்தில் பிறந்து பொறியியல் படிப்பு முடித்து சென்னையில் திரைப்படத் துறைக்கு வந்த அவர் பல இயக்குனர்களிடம் உதவி இயக்குனராக பணியாற்றி இருக்கிறார். நீண்ட காலம் ஊடக வெளிச்சம் பெறாமல் இருந்த அவர் அண்மைக்காலமாக அவர் சீரியல் வழியாகவும், பரியேறும் பெருமாள் போன்ற திரைப்படங்களின் வழியாகவும் ஊடக வெளிச்சத்தைப் பெற்றார். தனக்கு ஜாதி கடவுள் மீது நம்பிக்கை இல்லை என்றும் கருப்புச் சட்டை தான் தனக்கு பிடித்த உடை என்றும் பல பேட்டிகளில் வெளிப்படையாக கூறியதோடு தனது மகன், மகளுக்கு ஜாதி மறுப்புத் திருமணம் செய்வதே தனது நோக்கம் என்றார். நடிகர் வடிவேலுவின் பிரபலமான நகைச்சுவை காட்சிகளான ‘கிணறு காணாமல் போவது, போலிஸ் அடிச்சுக் கேட்டாலும் சொல்லிவிடாதே’ போன்ற காட்சிகளை உருவாக்கியதே மாரிமுத்து தான் என்று நடிகர் வடிவேலு பதிவு செய்துள்ளார். வளர்ந்துவந்த ஒரு பகுத்தறிவு நடிகர் 57 வயதில் முடிவெய்தியது மிகவும் துயரமானது.

அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த தோழரின் உடலுக்கு சென்னை மாவட்டக் கழகம் சார்பாக கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி ஆகியோர் மலர் மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தினர்.

# பறைக் கருவிகளை எரிக்கச் சொன்னவர் பெரியார்

## திரிபு வாதங்களுக்கு ஆதாரத்துடன் மறுப்பு (2)

**கொளத்தூர் மணி**



பெரியார் முடிவெய்தி 50 ஆண்டுகள் கழிந்த பின்னரும் பெரியார் பற்றிய நினைவுகளும், தாக்கங்களும் ஒவ்வொரு நாளும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதன் தொடர்ச்சியாக மற்றொரு செய்தியையும் பார்ப்போம். அது 21.12.1946 நாளிட்ட 'குடிஅரசு' இதழில் துணைத் தலையங்கமாக "தாழ்த்தப் பட்டோரும் தப்பட்டை வாசித்தாலும்" என்ற தலைப்பில் வந்துள்ள வேண்டுகோள் அறிவிப்பு.

"சென்ற சில மாதங்களுக்கு முன்பு (கடந்த நவம்பர் மாதம் என்பதே சரி) பெரியார் ஈ.வெ. ராமசாமியவர்கள் வாணியம்பாடியில் சொற்பொழிவு நிகழ்த்தும் போது (சொற்பொழிவு முடிந்தவுடன் என்பதே சரி) அக்கூட்டத்திலேயே "பறையர்கள்" எனப்படுவோர் தமது இழிவுக்கு காரணமான தப்பட்டைகளைக் கொளுத்திவிட்டனர் என்ற செய்தி யாவரும் அறிந்ததே. இந்நிகழ்ச்சியை அப்பகுதியில் பல இடங்களில் பலர் தமது பறைகளைக் கொளுத்தி வருகின்றனராம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் ஒருவரான "பறையர்" எனப்படுவோர் தமது தொழிலின் காரணமாகவே பறையர் என்று அழைக்கப்படுவதும், அதனாலேயே இழிவாக எண்ணப்படுவதும், நடத்தப்படுவதும் யாவரும் நன்கு அறிந்த செய்திகளே யாகும். எனவே, வாணியம்பாடி தோழர்களைத் தொடர்ந்து எல்லா ஊர்களிலுள்ள பறையர் என்றழைக்கப்படும் தோழர்களும் தன் பரம்பரை இழிவுக்கே காரணமானதும் வேண்டிய வருவாய் கொடுக்க வழியற்றதுமான இத்தொழிலைக் கை விடுவதற்கு அறிகுறியாக தமது தப்பட்டைகளை கொளுத்தி தமது வெறுப்பை வெளிப்படையாய் தெரிவித்துக் கொள்வார்களாக!

"இதற்கான ஒத்துழைப்பையும், ஆதரவையும் தருமாறு ஆங்காங்குள்ள உள்ள திராவிடர் கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறோம்." இதுவே அந்த வேண்டுகோள் அறிவிப்பாகும்.

மேற்கண்டவாறு 1946ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தன் முன்னிலையில் பறைகள் எரிக்கப்பட்டதை அனுமதித்த பெரியார் - 1946 டிசம்பர் மாதத்தில் இவ்வாறான எரிப்புகளை நடத்துமாறும், நடத்துவதற்கு திராவிடர் கழகத் தோழர்கள் ஒத்துழைப்பு தரவேண்டும் என கேட்டு தனது ஏடான குடி அரசு ஏட்டில் வேண்டுகோளை வெளியிட்ட பெரியார் தான், இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் 1948 டிசம்பரில் தன்னை சந்தித்து ஆதரவு கேட்ட இளையபெருமாள் அவர்களிடம் " பறையடிப்பதை நீங்கள் செய்யாவிட்டால் யார் செய்வார்கள்?" என்று கேட்டாராம்.

கேழ்வரகில் நெய் வடிகிறது என்று 2010ல் ரவிக்குமார் எழுதியுள்ளதை சரிபார்த்தல் ஏதுமின்றி பாலசிங்கம் ராஜேந்திரன் 2023இல் மீள் பதிவு செய்துள்ளார்.

புத்தி உள்ளவர்கள் புரிந்து கொள்ளவே இவ்விளக்கங்கள்:

ஆனால் தோழர் ரவிக்குமார் எழுதியுள்ள நூலில் 1948ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் தேதி சிந்தாதிரிப்பேட்டை பெரியார் அவர்கள் இல்லத்தில் சந்தித்த இளையபெருமாள் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை மட்டும் ஏனோ தோழர் பாலசிங்கம் ராஜேந்திரன் பதிவு செய்யவில்லை. தேதி, மாதம் ஆகியவற்றை அப்படியே மீள் பதிவு செய்யாமல் 1948ஆம் ஆண்டு என்பதோடு நிறுத்திக் கொண்டிருக்கிறார்.

இதற்கும் ஒரு உள் நோக்கம் இருக்கிறது. 1948ஆம் ஆண்டின் பிற்பகுதியில்தான், சுதந்திரம் பெற்ற இந்தியாவில் சென்னை மாகாண அரசாங்கம் மீண்டும் இந்தியைத் திணிக்க எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராக இரண்டாம் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்த காலக் கட்டம் அது.. 20-6-1948 அன்று சென்னை மாகாணத்தில் 'கட்டாய இந்தி' என்ற அறிவிப்பு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுகிறது. தமிழ் பேசும் பகுதிகளில் இந்தி மொழி விருப்பப் பாடமாகவும், தெலுங்கு, மலையாளம், கன்னடம் பேசும் மக்கள் வாழும் பகுதியில் கட்டாயப் பாடமாகவும் அரசின் அந்த அறிவிப்பு கூறியது.

அதனைக் கண்டித்து 17.7.1948 அன்று சென்னை புனித மேரி மண்டபத்தில் "இந்தித் திணிப்பு எதிர்பாளர்கள் மாநாடு" திராவிடர் கழகத்தின் ஒருங்கிணைப்பில் மறைமலை அடிகள் தலைமையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் பெரியார்,திரு.வி.க.,பாரதிதாசன், ம.பொ.சி, அண்ணா, நாரண துரைக்கண்ணன், டாக்டர் தருமாம்பாள், அருணகிரி அடிகள் ஆகியோரும் பங்கேற்றனர். தொடர்ந்து பல மாநாடுகள், புலவர் மாநாடு, மாணவர் மாநாடு, பெண்கள் மாநாடுகளும், கவர்னர் ஜெனரல் ராஜாஜிக்கு கருப்பு கொடி, அமைச்சர்களுக்கு கருப்பு கொடி, கண்டன ஊர்வலங்கள் என பலவகைப் போராட்டங்கள் தொடர்கின்றன.

22 8 1948 அன்று சென்னையில் திராவிடர் கழகத்தின் மத்திய நிர்வாகக் குழு இந்தி எதிர்ப்புப் போராட்டம் குறித்து ஆலோசிக்கக் கூடிய போது பெரியார், அண்ணா, தி.பொ. வேதாச்சலம், குத்தூசி குருசாமி உள்ளிட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவரும் (சுமார் 100 பேர்கள்) கைது செய்யப்பட்டு ஐந்து நாட்கள் சிறையில் வைத்திருந்து 27.8.1948 இன்று விடுவிக்கப்படுகின்றனர்.

ஐதராபாத் சமஸ்தானத்தில் இந்தியப் படைகள் நுழைந்துள்ள போர்ச்சூழலைக் கருத்தில் கொண்டு இந்தி எதிர்ப்புப் போர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, மீண்டும் 2.11.1948 முதல் தொடங்கியது.

இந்த கட்டத்தில்தான் காவல் துறையின் வெறியாட்டங்கள் தொடங்குகின்றன. 2.11.1948 அன்றே 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது. தடையை மீறி கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள் நடக்கின்றன. தூத்துக்குடி, மதுரை, கோவில்பட்டி, திருக்கோவிலூர், திருவாரூர், நன்னிலம், குடவாசல், பேரளம், கள்ளக்குறிச்சி, வேலூர், விழுப்புரம் ஆகிய இடங்களில் 144 தடையை மீறி ஊர்வலங்கள் நடந்த போது காவல்துறை கண்மூடித்தனமாக தோழர்களைத் தாக்கி எலும்பு முறிவு, மண்டை உடைப்பு என்ற அளவுக்கான காவல்துறை அத்துமீறல்கள் நடந்தேறின. அதனால் பெரியார் 144 தடை ஆணை உள்ள கும்பகோணத்தில் 18.12.1948 அன்று மறியலில் ஈடுபடுகிறார். அன்று நள்ளிரவு 2:30 மணிக்கு கைது செய்யப்பட்ட பெரியார் காவல் நிலையம் அழைத்துச் செல்லப்படுகிறார். அங்கு வந்த சப் கலெக்டர் "144 சீக்கிரத்தில் எடுக்கப்பட்டுவிடும்; நீங்கள் ஊர்வலத்தை நிறுத்தி விடுங்கள்" என்று கேட்க பெரியார் " சீக்கிரம் என்றால் எனக்கு ஒரு குறிப்பு வேண்டும், ஒரு வாரத்தில் எடுத்து விடுவீர்களா?" என்கிறார்.

**1948, டிசம்பர் 20 அன்று இளையபெருமாள் பெரியாரை சென்னையில் சந்தித்த போது இழி தொழில்களை நீங்கள் தான் செய்ய வேண்டும் என்று பெரியார் கூறியதாக ரவிக்குமார் எழுதுகிறார்.**

**அந்த தேதியில் பெரியார் சென்னையிலேயே இல்லை. இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் காரணமாக கைது செய்யப்பட்டு தஞ்சையில் இருந்தார்.**

அதற்கு சப் கலெக்டர் அரசாங்கத்தோடு கலந்தாலோசிக்க வேண்டும் என்கிறார். "அதற்கு இரண்டு நாள் போதுமே! அதுவரை நிறுத்துகிறேன்" என்கிறார் பெரியார். ஆனால் நாள் குறிப்பிடாமல் நிறுத்துங்கள் என்று வேண்டுகிறார் சப் கலெக்டர். "என்னுடைய முடியாமையைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று முடித்துக் கொள்கிறார் பெரியார். 19.8.1948 இரவு எட்டு மணிக்கு 9 நாட்கள் ரிமாண்ட் என்று அறிவிக்கிறார்கள். இரவு 10 மணி வரை அழைத்து போகப்படாததால் அங்கேயே படுத்து அனைவரும் தூங்கி விடுகிறார்கள். அடுத்த நாள் காலை பெரியார் மட்டும் திருச்சி சிறைக்கு அழைத்து செல்லப்படுவார் என்று கூறி ஒரு லாரியில் ஏற்றிக் கொண்டு அழைத்துச் செல்லப்படுகிறார். திருச்சி சிறைக் கண்காணிப்பாளரோ "151 பிரிவில் கைது செய்யப்பட்டவர்களை அரசின் ஆணையின்றி சிறையில் வைக்க முடியாது" என்று மீண்டும் கும்பகோணத்திற்குத் திருப்பி அனுப்பி விடுகிறார். தஞ்சை வந்து காவல்துறை கண்காணிப்பாளர் தஞ்சை சப்ஜெயிலில் ஒன்பது நாட்களுக்கு வைக்குமாறு ஆணை வழங்குகிறார். ஆனால் தஞ்சை சப் மாஜிஸ்திரேட் கும்பகோணம் சப் கலெக்டர் கொடுத்த ரிமாண்டை ஏற்றுக்கொள்ள முடியாது உள்ளூர் அதிகாரி கொடுத்தால் தான் ஒத்துக்கொள்வேன் என்று திருப்பி அனுப்புகிறார். பின்னர் தஞ்சை அடிசனல் மேஜிஸ்திரேட்டிடம் ஆணை பெற்றுவந்து தஞ்சை கிளைச் சிறையில் அடைக்கப்படுகிறார் பெரியார். (20.12.1948) அன்று மாலை 4 மணியளவில் ஒரு உளவுத்துறை காவலர் பெரியாரின் அறைக்கு வந்து உங்களுக்கு இப்போது எங்கு செல்ல ஆசை என்று கேட்கிறார். பெரியாரும் எந்த சிறைக்கு செல்கிறீர்கள் என்று கேட்பதாக கருதிக் கொண்டு சென்னைக்கு அனுப்புங்கள் என்று கேட்கிறார். அவர் சென்ற சிறிது நேரத்தில் சப் மாஜிஸ்திரேட் வந்து உங்களை விடுதலை செய்யச் சொல்லி ஆணை வந்துவிட்டது. ஆனால் அவ்வாணையில் அடிஷனல் மாஜிஸ்ட்ரேட் கையெழுத்து இல்லாததால் மீண்டும் அனுப்பியுள்ளேன் என்று கூறுகிறார்.

மாலை 5 மணி அளவில் பெரியாரைக் காண பெரிய கூட்டம் வெளியே கூடிவிட்டது. பெரியாரும் பயணத்துக்கு தயாராகிக் கொண்டிருக்கும் போது காவல்துறை 6.30 மணிக்கு தான் விட வேண்டும் என்று சொல்லிவிட்டதாக பெரியாருக்குத் தெரிவிக்கப்படுகிறது. அது போலவே 6.30 மணிக்கு காவல் துணைக் கண்காணிப்பாளர், ஒரு சார்ஜண்ட், ஒரு உதவி ஆய்வாளர், நான்கு காவலர்கள், ஒரு கார், லாரியுடன் வந்து பெரியாரை வெளியே அழைத்துச் செல்கிறார்கள். வெளியே மக்களும் தோழர்களும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொடிகளுடன் முழக்கம் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் பேசக்கூட முடியாதவாறு பெரியார் காரில் ஏற்றப்பட்டு காவல்துறை லாரி ஒன்று பின் தொடர மக்கள் கூட்டத்தை விரட்டித் தள்ளி கொண்டு வெளியே செல்கிறது. பத்து மைல் தூரத்திலிருந்த அய்யம்பேட்டை ரயில் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார்கள். தஞ்சையில் கட்டுப்படுத்த முடியாத அளவு மக்கள் இருந்ததால் இங்கு அழைத்து வர வேண்டியதாகி விட்டது என்று துணை கண்காணிப்பாளர் விளக்கம் கொடுத்துவிட்டு 20.12.1948 அன்று இரவு அங்கிருந்து தொடர் வண்டியில் ஏற்றி அனுப்பி வைக்கிறார்கள். 21.12.1948 அன்று காலை 5.40 மணிக்கு தொடர் வண்டி சென்னை எழும்பூர் வந்து சேர்ந்துள்ளது.

அன்றே சென்னை டாக்டர் சடகோபன் அவர்களிடம் பெரியார் அவர்களுக்கு உடல்நிலை பரிசோதனை செய்யப்படுகிறது. மேற்கண்ட செய்திகள் 21.12.1948, 22.12.1948 நாளிட்ட விடுதலை இதழில் வெளிவந்துள்ள செய்திக் குறிப்பிலும், பெரியார் எழுதியுள்ள " எனது அரஸ்ட் வேடிக்கை" என்ற நீண்ட கட்டுரையிலும் காணக்கிடக்கின்றன (இந்தி எதிர்ப்புப் போராட்டம் 31.12.1948 இல் நிறுத்திக் கொள்ளப்பட்டது. 1949ஆம் ஆண்டில் இந்தித் திணிப்பு ஆணை திரும்பபெற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.)

பெரியார் 18.12.1948 இரவு கைது செய்யப்பட்டு 20.12.1948 அன்று மாலை தஞ்சையில் விடுதலை செய்யப்பட்டு தொடர்வண்டியில் அனுப்பப்பட்டு 21.12.1948 காலையில் சென்னை வந்து சேர்ந்துள்ளார் என்பதை எடுத்துக் கூறுவதே இவற்றை விரிவாக எழுத வேண்டி வந்ததன் நோக்கம் ஆகும்.

தோழர் ரவிக்குமார் 2010ஆம் ஆண்டில் வெளியிட்ட "எல்.இளைய பெருமாள் வாழ்வும் பணியும்" என்ற நூலில், இளையபெருமாள் அவர்களின் கூற்றாக (21.12.1948 அன்று காலை சென்னை வந்து சேர்ந்த பெரியாரை) 20.12.1948 அன்று சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் சந்தித்து பெரியாரிடம் பறை ஒழிப்புக்கு ஆதரவு கேட்டபோது " நீங்கள் செய்யாவிட்டால் யார் செய்வார்கள்?" என்று பெரியார் எதிர்க் கேள்வி எழுப்பியதாக குறிப்பிட்டுள்ளது தவறானதாகும், பொய்யானதாகும்.

பொய்யை உருவாக்கியவர் இளையபெருமாளா? ரவிக்குமாரா? அவரவர் யூகித்துக் கொள்ள வேண்டியது தான்.

தொடரும்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

## திருப்பூர், கோவை, திண்டுக்கல்லில்

# மக்கள் பேராதரவுடன் தெருமுனைக் கூட்டங்கள்

**திருப்பூர்:** ஆகஸ்ட் 7,8 ஆகிய தேதிகளில் மங்கலம் நான்கு வழி சந்திப்பு, சுல்தான் பேட்டை, பெரியாண்டிபாளையம் பிரிவு, குமரன் கல்லூரி, ஊத்துக்குளி ஆர்.எஸ், கூழிபாளையம், மன்னரை, காங்கேயம் பேருந்து நிலையம், நத்தக்காடையூர், படியூர், பொங்கலூர், அருள்புரம், வீரபாண்டி பிரிவு, உள்ளிட்ட இடங்களில் நடைபெற்றது.

ஆகஸ்ட் 21,22 ஆகிய தேதிகளில் பல்லடம் பகுதிகளுக்கு உட்பட்ட மகாலட்சுமி நகர், வடுகபாளையம், கேத்தனூர், காமநாயக்கன்பாளையம், லட்சுமி மில்ஸ், காரணம்பேட்டை, அனுப்பட்டி, எம்.ஜி.ஆர் சாலை ஆகிய இடங்களில் நடைபெற்றது.

ஆகஸ்ட் 22 அன்று பல்லடம் லட்சுமி மில்ஸ் பகுதியில் 50வது தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. அதனையொட்டி கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்டத் தலைவர் முகில்ராசு, கழக முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞரணி துணைச் செயலாளர் சுப்பிரமணியம், திமுக சிறுபான்மையினர் நலப் பிரிவு ஒன்றிய தலைவர் முஜிபுர் ரகுமான், மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, மாநகர அமைப்பாளர் முத்து, தமிழ்நாடு மாணவர் கழகம் மகிழவன், பிரசாந்த், எழுத்தாளர் சம்சுதின் ஹீரா ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

கழக செயற்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், சிபிஐ விவசாய சங்கத் தலைவர் சுப்பிரமணியன் , அய்யப்பன், தனபால், சரசு, சிரிஜா, மாரிமுத்து, ரமேசு, ராஜா, சூலூர் தமிழ்ச்செல்வி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி ஊத்துக்குளி பகுதிச் செயலாளர் குமார், புரட்சிகர இளைஞர் முன்னணி காங்கேயம் பகுதி பொறுப்பாளர் கவி, தமிழினியன், கழக பல்லடம் நகரச் செயலாளர் கோவிந்தராசு, ஒன்றியச் செயலாளர் சண்முகம், வீரபாண்டி கார்த்திக், மகளிர் சங்க நிர்வாகி தனமணி, கைத்தறி நெசவாளர் சங்க நிர்வாகி சுப்பிரமணியம், பல்லடம் பழனிச்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சென்னை** : 04.09.2023 திங்களன்று பள்ளிக்கரணை மாநகராட்சி அலுவலகம், மடிப்பாக்கம் பொன்னியம்மன் கோயில் தெரு ஆகிய இரண்டு இடங்களிலும், 05.09.2023 செவ்வாய் புதன் மாலை 6 மணிக்கு எம்.ஜி.ஆர் நகரிலும், இரண்டாவது கூட்டம் இரவு 8 மணிக்கு டாக்டர். கான் நகரிலும், 06.09.2023 புதன் கிழமை அன்று மாலை 5 மணிக்கு இராமாபுரம் அரசமரம் சந்திப்பிலும், இரவு 8 மணிக்கு இராமாபுரம் அம்பேத்கர் சிலை அருகிலும் கூட்டம் நடைபெற்றது.

07.09.2023 வியாழன் அன்று மாலை 5 மணிக்கு இராமாபுரம் அன்னை சத்யா நகரிலும், 08.09.2023 வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு காரம்பாக்கம் பாங்க் ஆப் பரோடா அருகிலும், மாலை 7 மணிக்கு அய்யப்பன்தாங்கல் பேருந்து நிலையம் அருகிலும், 9.9.2023 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆலம்பாக்கம் AGS தியேட்டர் எதிரிலும், மாலை 7.30 மணிக்கு மதுரவாயல் EB ஆஃபீஸ் அருகிலும், 11.09.2023 செவ்வாய் மாலை 6 மணிக்கு முகலிவாக்கம் அரசமர ஜங்ஷனில் நடைபெற்றது.

திமுக மாவட்ட பிரதிநிதி MR சதிஷ், எட்வின் பிரபாகரன், அருண் கோமதி, பெரியார் நம்பி, விக்னேஷ், காசி தமிழன் தொடக்கவுரையாற்றினர். தொடர்ந்து நாத்திகன் – உமாபதி குழுவினரின் நைய்யாண்டி அரசியல் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

திமுக மடிப்பாக்கம் (187) வட்டத் துணைச் செயலாளர் தேவி கமல், தென்சென்னை மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஈஸ்வரமூர்த்தி,154 வார்டு கவுன்சிலர் இராமநாதபுரம் செல்வகுமார், 155 வார்டு கவுன்சிலர் ராஜீ, வட்டச் செயலாளர் செல்வம், விசிக நிர்வாகிகள் நவீன், ரமணன், மதி, ஏழுமலை, ராவணன், மக்கள் குடிஅரசு இயக்க ஒருங்கிணைப்பாளர் ஜான் மண்டேலா, திராவிடர் கழக சோழிங்கநல்லூர் மாவட்டச் செயலாளர் பாண்டு, சிங்காரவேலர் – பெரியார் பேரவை நிர்வாகி செல்வம், திமுக 137 வட்ட செயலாளர் பி.கே.குமார், திமுக தென் சென்னை மாவட்ட பிரதிநிதி முத்து மாரியப்பன்,

திமுக கலைஞர் கருணாநிதி நகர் திமுக ஐ.டி.விங் அமைப்பாளர் சி.எஸ்.தினேசு மற்றும் எம்ஜிஆர் நகர் திராவிடர் விடுதலைக் கழக தலைவர் செயசீலன், செயலாளர் பெரியார் மணிமொழியன், இராமபுரம் பகுதி தலைவர் க,சுப்பிரமணி, செயலாளர் மணி பாரதி, கண்ணன், மூவேந்தேன் ஆகியோர் பங்கேற்றனர். ராமாபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ராஜதுரை தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

**கோவை** : மாநகர கழகம் சார்பாக சனாதனம் எது திராவிடம்? எது சனாதனம்? 16வது தெருமுனைக் கூட்டமானது 07.09.2023 வியாழன் அன்று உடையாம்பாளையம் காந்திநகர் பகுதியிலும் 17வது கூட்டம் பீளமேடு புதூரிலும், 18வது கூட்டம் சின்னியாம்பாளையத்திலும் நடைபெற்றது.

கிருட்டிணன் சனாதன எதிர்ப்பு பாடல்களைப் பாட, எம்.ஆர். ராதா கலைக் குழுவினர் கேள்வி பதில் நிகழ்ச்சியை நடத்தினர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பொறுப்பாளர் மருத்துவர் மாணிக்கம், கழக கோவை மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், வழக்கறிஞர் சரவணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி பாலகிருஷ்ணன், ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். வழக்கறிஞர் பாபு நன்றி கூறினார்.

கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, திமுக பீளமேடு இளைஞரணி துணை அமைப்பாளர் சுரேஷ், நிர்மல்குமார், வெங்கட், தமிழ்செல்வி, ராஜி, பொன்மணி, நவீன், கிருஷ்ணன், அய்யப்பன், ஓட்டுனர் ரமேஷ், விவேகானந்தன், வழக்கறிஞர் விஷ்ணு, தோழா மொபைல்ஸ் சிவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கடலூர்** : 9.9.2023 சனிக்கிழமை அன்று கடலூர் மாவட்டக் கழக சார்பில் தெருமுனைக் கூட்டம் புவனகிரி சுற்றுவட்டார பகுதியில் நடைபெற்றது. காலை 10 மணியளவில் பரங்கிபேட்டையில் தொடங்கி கிள்ளை, முட்லூர், புவனகிரி நகரத்தில் கூட்டம் நிறைவடைந்தது.

கடலூர் மாவட்ட அமைப்பாளர் அ.சதிசு தலைமை தாங்கினார், மாவட்ட செயலாளர் ர.சிவக்குமார், மாவட்ட துணை தலைவர் செ.பிரகாஷ், மாணிக்க முருகேசன், ஒன்றிய பொருப்பாளர் பெரியார் ராஜ்மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பெரியார் விழுது திராவிட மகிழன் பகுத்தறிவு பாடல் பாட நிகழ்வு துவங்கியது.

கடலூர் மாவட்ட தலைவர் மதன்குமார் தொடக்கவுரையாற்றினார். தொடர்ந்து விழுப்புரம் மாவட்ட தலைவர் பூ.ஆ.இளையரசன் கருத்துரையாற்றினார். நிறைவாக தலைமை செயற்குழு உறுப்பினர் ந.அய்யனார், விடுதலைக் குரல் ஒருங்கிணைப்பாளர் கார்த்திகேயன் ஆகியோர் சிறப்புரையாற்றினார். கலைமணி, ராஜேஷ்கண்ணன், ஆகாஷ், இளநிலவன், அபிஷேக், சபரிவாசன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**தர்மபுரி** : தர்மபுரி மாவட்டக் கழகம் சார்பில் பென்னாகரம், கூத்தப்பாடி, ஏரியூர், ஒகேனக்கல், பி அக்ரஹாரம், கடமடை ஆகிய பகுதிகளிலும் செப்டம்பர் 11 அன்று பாலக்கோடு, வெள்ளி சந்தை, மாரண்டஹள்ளி, பாப்பாரப்பட்டி பேருந்து நிலையம், பாப்பாரப்பட்டி அரசு கலைக்கல்லூரி அருகில், சோம்பட்டி பேருந்து நிறுத்தம் மற்றும் பண்டஅள்ளி கிராமம் ஆகிய இடங்களில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் வேணுகோபால் தலைமை தாங்கினார், மாவட்டச் செயலாளர் சந்தோஷ் குமார் முன்னிலை வகித்தார். கூட்டத் தொடக்கமாக சந்தோஷ் குமார் மற்றும் அருண்குமார் குழுவின் அரசியல் நையாண்டி கலை நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்நாடு மாணவர் கழக பேச்சாளர் திருப்பூர் மகிழவன் சிறப்புரையாற்றினார்.

மாவட்ட அமைப்பாளர் பரமசிவம், செல்வமணி, அருண்குமார், அசோக் குமார், ராமதாஸ், நஞ்சப்பன், தேவன், மு.மாதையன், சுதந்திர குமார், தேசிய குமார் மற்றும் பல தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

**சேலம்** : நங்கவள்ளி ஒன்றிய கழகம் 11 மற்றும் 12வது தெருமுனைக் கூட்டம் 10.09.2023 அன்று ஞாயிறு மாலை 5 மணிக்கு வனவாசி புதுப்பேட்டை பகுதியிலும், இரவு 7 லிருந்து 9 மணி வரை நங்கவள்ளி அம்பேத்கர் நகர் பகுதியிலும் சிறப்பாக நடைபெற்றது. சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராசு பெரியாரியப் பாடல்களை பாடி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் பொ.கிருஷ்ணன் தலைமை வகித்தார், வனவாசி நகர பொருளாளர் சு.பன்னீர்செல்வம், நங்கவள்ளி 11வது வார்டு கவுன்சிலர் சுரேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் கோ.இராஜேந்திரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். காவை இளவரசனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி நடைபெற்றது. கழக தலைமைக் குழு உறுப்பினர் அ.சக்திவேல், மாவட்ட அமைப்பாளர் அன்பு, திராவிட தமிழர் எழுச்சிக் கழகம் தமிழ்மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். வனவாசி நகர பொறுப்பாளர் கதிர், குமார் நன்றி கூறினர்.

சந்திரசேகர், அருள்குமார், உமாசங்கர், பிரபாகரன், சுடர்மணி, பேரறிவாளன், தமிழ், கி.பிரபாகரன், முத்துராஜ், விஜய், தேவராஜ், நாகராஜ், பென்னட், அருள்குமார், செட்டியூர் மாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : September 15, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran